2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, எடப்பாடி நீதிமன்றத்தினுடைய ஸ்தல புராணத்தைச் சொன்னதையெல்லாம் நான் மறுக்கவில்லை. அங்கு ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றம் தேவை என்பதை உணர்ந்துதான் அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்ற உறுதியை நான் தந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டு, அமர்கிறேன். (குறுக்கீடு)

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.எம். பழனிசாமி, நீங்கள் என்ன எடப்பாடி நீதிமன்றத்திற்குக் கேட்கப் போகிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த subject-க்கும், உங்களுக்கும் சம்பந்தமில்லையல்லவா? உட்காருங்கள்.

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

72—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***104487—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2010 ஏப்ரல் 21

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இந்தக் கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.*

திரு. செ. சின்னச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை தாலுகா என்பது மிகவும் வறட்சியான தாலுகா. திருச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதி என்னுடைய மருங்காபுரி தொகுதியிலுள்ள மணப்பாறை தாலுகா. காவிரி ஓடுவதால் டெல்டா மாவட்டம் என்று இருந்தாலும்கூட, மணப்பாறை, வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கிறது. மணப்பாறையிலே இருக்கிற மாணவ, மாணவிகள் கல்லூரிப் படிப்பைத் தொடர வேண்டுமென்றால் 60, 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்சிக்குச் செல்ல வேண்டிய சூழல் இருக்கிறது. மணப்பாறை ஒன்றியத்திலே 21 ஊராட்சிகள், வையம்பட்டி ஒன்றியத்திலே 18 ஊராட்சிகள், மருங்காபுரி ஒன்றியத்திலே 49 ஊராட்சிகள், பொன்னம்பட்டி பேரூராட்சி, மணப்பாறை நகராட்சி இவற்றை உள்ளடக்கி ஓர் அரசுக் கல்லூரிகூட இல்லை. எனவே, இவற்றை உள்ளடக்கியிருக்கிற இந்தப் பகுதிகளிலுள்ள மாணவ, மாணவிகள் மேல்படிப்பைத் தொடர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் +2 முடித்தவுடன் வேலைக்குச் செல்கின்றார்கள். அதுவும் திண்டுக்கல், வடமதுரை போன்ற பகுதிகளிலுள்ள மில்களில் தினக் கூலி வேலைக்குச் செல்லுகின்ற நிலை மாணவ, மாணவிகளுக்கு ஏற்படுகிறது. எனவே, அரசு இதைக் கருத்திலேகொண்டு மணப்பாறை தாலுகாவிலே ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென இந்த நேரத்திலே கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த அரசு, மாவட்ட*

2010 ஏப்ரல் 21]

அளவிலேதான், எந்தெந்த மாவட்டங்களில் அரசுத் தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசுப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரிகள் இல்லையோ அந்த மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டங்களாகக் கருதி, முன்னுரிமை கொடுத்து, அங்கே அமைப்பதற்கான ஏற்பாடுகளை முறையாகச் செய்துகொண்டிருக்கின்றது. திருச்சி மாவட்டம், கல்வியிலே வளர்ச்சி பெற்ற மாவட்டம் என்பதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. திருச்சி மாவட்டத்தில் மட்டும் அரசுப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, துவாக்குடியில் அரசுக் கல்லூரியே ஒன்று இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 22 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், திருச்சி மாவட்டத்தில் மட்டும் இருக்கின்றன. அந்த 22 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கிட்டத்தட்ட இந்த ஆண்டு மட்டும் 2,179 இடங்கள் காலியாகவே இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டம் ஓரளவுக்கு surplus மாணவர்கள் சேர்வதற்கு வாய்ப்புள்ள மாவட்டமாகவே கருதப்படுகின்றது. குறிப்பாக, மணப்பாறையில் ஒரு தனியார் பொறியியல் கல்லூரியும் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, வருங்காலங்களில் அரசுக் கல்லூரிகளை உருவாக்குகிற நிலைமை விரிவுபடுத்தப்படுகின்றபோது, நிதிநிலையைக் கொண்டு முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் டெல்டா மாவட்டமாக இருந்தாலுங்கூட, எங்களுடைய மணப்பாறை தாலுகாவிலே 17 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 16,523 மாணவர்கள் படிக்கிறார்கள். அதைப்போல, எங்களுடைய மணப்பாறை தாலுகாவைப் பொறுத்தவரை 14 தனியார் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே 13,922 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். ஆக 30,545 மாணவ, மாணவிகள் ஒரு ஆண்டில் +2 படிக்கிற நிலையிலே இருக்கிறார்கள். இவர்கள் மேல்படிப்பைத் தொடர முடியாத நிலை இருக்கிறது. இங்கே அமைச்சர் சொல்கிறபோது அங்கே தனியார் பொறியியல் கல்லூரி இருப்பதாகச் சொன்னார்கள். மணப்பாறையிலே ஒரு தனியார் பொறியியல் கல்லூரி இருக்கிறது. அது ஏற்கெனவே கலை

அறிவியல் கல்லூரியாக இருந்தது. அந்தக் கலை அறிவியல் கல்லூரி திருச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே, அங்கே படிப்பதற்கு, அந்தத் தனியார் கல்லூரியிலே படிப்பதற்கு, மாணவர்களுக்கு இயலாத சூழல் இருக்கிறது. எனவே, இதைக் கருத்திலேகொண்டு, கேட்டதையும் செய்கிறோம், கேட்காததையும் செய்கிறோம் என்று சொல்கிற நீங்கள், அந்தப் பின்தங்கியப் பகுதி மாணவ, மாணவிகளுடைய நலன் கருதி, மணப்பாறையிலே பலநோக்குக் கல்லூரியை அமைக்காவிட்டாலுங்கூட, அரசுக் கலை அறிவியல் கல்லூரியையாவது அமைத்துத் தர வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதைப்போல, மாவட்ட அளவிலேயே நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு புள்ளிவிவரங்களோடு செய்துகொண்டிருக்கின்றது. அடுத்த கட்டமாகத்தான் தாலுகா அளவிலே வரமுடியும். அதுவும் நிதிநிலையைப் பொறுத்தது. ஆகவே, மாவட்ட அளவிலே திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அனைத்துக் கல்லூரிகளும் நிறைந்து இருக்கிற ஒரு மாவட்டம். மணப்பாறை வட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அறிவியல் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரிகள் இல்லாது இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்குமானால் வருங்காலங்களில் பல்கலைக்கழகங்களின்மூலமாக அதைத் துவக்குவதற்கான ஏற்பாட்டினை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *73*, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

அலுவலகம்

***108017—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—